**செய்தி வெளியீடு எண் : 109** **நாள் : 14.01.2024**

**<u>செய்தி வெளியீடு</u>**

**<u>இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு அந்நாட்டு சிறையில் வாடும் தமிழ்நாடு மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட நடவடிக்கை எடுக்கக்கோரி மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம்</u>**

இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களையும்ம் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்கக் கோரி மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (14-01-2024) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தைச் சேர்ந்த 12 மீனவர்கள், 13.01.2024 அன்று நெடுந்தீவு அருகே மூன்று விசைப்படகுகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விவகாரத்தை இலங்கை அரசுடன் உரிய தூதரக வழிமுறைகள் மூலம் எடுத்துச் சென்று, இலங்கை சிறையில் தமிழ்நாடு மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

******

**<u>Text of the D.O. Letter dated 14.01.2024 of Thiru M.K. Stalin, Hon’ble Chief Minister of Tamil Nadu addressed to Dr. S. Jaishankar, Hon’ble Union Minister of External Affairs, regarding the immediate release of the apprehended fishermen and their fishing boats by the Sri Lankan Navy:</u>**

I would like to draw your attention to the apprehension of 12 fishermen and three fishing boats by the Sri Lankan Navy on 13.01.2024.

The fishermen from Kottaipattinam Fishing Harbour of Pudukottai District ventured for fishing on 13.01.2024 in three mechanized fishing boats bearing registration numbers IND-TN-08-MM-169, IND-TN-08-MM-151 and IND-TN-10-MM-730. While they were fishing near Neduntheevu they were taken into custody.

I request you to take up the matter with the Sri Lankan Government through appropriate diplomatic channels to immediately secure the release of our fishermen and their fishing boats.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in